IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, SRIVILLIPUTTUR
MC. NO. 1 /**2021**

**PW -1 Cross**

Name: திருமதி. பாலசங்கரி

S/o :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7 th day of February 2024

Signature of Witness.

07.02.2024.

எதிர் மனுதாரர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பி.டி.எஸ் முடித்துவிட்டு பல் மருத்துவராக வேலை செய்து வருகிறேன் என்றால், நான் பி.டி.எஸ் படித்துள்ளேன், தற்போது நான் வேலை செய்து வரவில்லை. இதற்கு முன்பு நான் மருத்துவராக எங்கு வேலை பார்த்தேன் என்றால், 2015 ல் பிக்ஸ்மைன் டென்டல் மருத்துவமனையில் வேலை பார்த்தேன். எவ்வளவு நாள், எத்தனை வருடம் வேலை பார்த்தேன் என்றால், 3, 4 மாதம் வேலை பார்த்தேன். அதற்கு பிறகு நான் தற்போது வரை எந்த வேலையும் பார்க்கவில்லை என்று சொன்னால்,மாத சம்பளத்திற்கு வேலை செய்யவில்லை. எனது நண்பர்கள் பல்மருத்துவராக வேலை செய்து வருகிறார்கள் அவர்கள் பணியில் இல்லாத நேரத்தில் என்னை வந்து பார்த்துக்கொள்ளும்படி சொல்வார்கள். நான் அவ்வாறு பகுதிநேரமாக சென்று வேலை செய்தால் அதற்கு எனக்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பார்கள் என்றால், நட்பின் அடிப்படையில் ஒரு சில நபர்கள் பணம் கொடுப்பார்கள். எவ்வளவு கொடுப்பார்கள் என்றால் ரூ.500/– தருவார்கள். அதற்கு மேல் தருவார்களா என்றால் ரூ.500/– தான் தருவார்கள். இந்த விவரங்களை நான் எனது மனுவில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தற்போது நல்ல திடகாத்திரமாக, ஆரோக்கியமாகதான் இருக்கிறேன் என்றால், மைல்டு ஹெல்த் பிரச்சனைகள் இருக்கிறது. இந்த விவரத்தை எனது மனுவில் சொல்லவில்லைஎன்றால் சரிதான். எனது அப்பா மருத்துவர் என்றால ் சரிதான். எனது அப்பா 20 செண்டில் வீட்டோடு கிளினிக் போட்டுள்ளார்என்றால் சரிதான். எனது அப்பாவிடம் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் இல்லை. எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் 5 பேர் வேலை செய்கிறார்கள். எனது அப்பாவிற்கு சொந்தமாக கார் உள்ளதென்றால் சரிதான். எனது தம்பி பெட்ரோல் பல்க் வைத்துள்ளார் என்றால் இல்லை. எனது தம்பி என்ன வேலை செய்கிறார் என்றால் போட்டோ கிராபி செய்கிறார். எனக்கும், எதிர் ம னுதாரருக்கும் காதல் திருமணம் நடைபெற்றதென்றால் சரிதான். என்னிடம் எதிர்மனுதாரர் பிரபோஸ் பண்ணினார். நான் எங்கள் வீட்டில் கேட்கும்படி சொன்னேன். எங்கள் வீட்டில் ஒப்புக்கொள்ளவில்லை என்பதால் நாங்கள் திருமணம் செய்துகொண்டோம். எதிர் மனுதாரரின் அப்பா, அம்மா ஒப்புக்கொண்டார்கள். எனது வீட்டில் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நிச்சயதார்த்தம் செய்வதற்கு மதுரை ஜி.ஆர்.டி ஹோட்டல் ஏற்பாடு செய்யப்பட்டதென்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு எங்கள் வீட்டில் இருந்து யாரும் வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவில் 5 வது பாராவில் எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையிலான பழக்கம் பற்றி எனது பெற்றோருக்கு தெரியாதென்று கூறியுள்ளது தவறு என்றால், சரியல்ல. திருமணத்திற்கு முன்பு ஜி.ஆர்.டி ஹோட்டல் நிச்சயதார்தத்திற்காக எனது பொற்றோருக்கு தெரியாமல் நானே புக் செய்தேனா என்றால் இல்லை. யார் புக் பண்ணினார்கள் என்றால் எனது அப்பா, அம்மா சேர்ந்துதான் புக் பண்ணினார்கள். அதற்கு பிறகு எனது அப்பா அம்மா மறுத்ததால் என்னுடைய விருப்பத்தில் திருமணம் நடைபெற்றதென்றால், சரிதான். எனக்கு டிக்டாக், smule போன்ற ஆப்புகளில் கணக்கு உள்ளதென்றால், smule ஆப்பில் இருக்கிறேன். டிக்டாக் ஆப்பில் இருந்தேன், அது எனது

கணவருக்கு பிடிக்கவில்லை என்று சொன்னதால் அதை நான் விட்டுவிட்டேன். எனக்கு டிக்டாக் செயலில் 76,000 பின் தொடர்பவர்கள் இருந்தார்கள் என்றால், அவ்வளவு இருக்க வாய்ப்புஇல்லை. தோராயமாக எவ்வளவு இருப்பார்கள் என்றால், தெரியவில்லை. smule ஆப்பில் எத்தனை பாலோவர் இருக்கிறார்கள் என்றால் தெரியாது. நான் இன்றையதினம் வரையிலும் smule செயலியில் ஆக்டிவாக இருக்கிறேன் என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது முழுவதும் நான் தான் என்றால், நான் இருக்கிறேன். ஒரு புகைப்படத்தில் எனது முகம் தெரியவில்லை. நெற்றிவரை மட்டும் தான் தெரிகிறது, அதனால் அது நான்தானா என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்பட்ட மேற்படி புகைப்படத்தில் கமெண்ட் செய்தவர்கள் அறுவறுக்கத்தக்க வகையில் போட்டுள்ளார்கள் என்றால், நான் கமெண்ட்ஸ் பார்த்ததே கிடையாது. smule ஆப்பில் நான் போடும் பதிவிற்கு கமெண்ட் போடுவார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் கமெண்ட் பண்ணலாம் என்று தெரியும். அதனால் எனது பதிவிற்கு போடப்பட்ட கமெண்டை நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்ட மேற்படி புகைப்படங்கள் smule ஆப்பில் இருந்து எடுக்கப்படவை என்றால் கமெண்ட்கள் உள்ள போட்டோ டிக்டாக் ஆப்பில் இருந்தும், என்னுடைய புகைப்படம் smule ஆப்பில் இருந்தும் எடுத்துள்ளார்கள். மேற்படி புகைப்படங்கள் மொத்தம்–13 எண்ணங்கள் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்படி எ.ம.சா.ஆ. 1 குறியீடு செய்ய அதற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 B யின் கீழ் உரிய சான்று இல்லை என்றும், எதிர் உரையில் 10 புகைப்படங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளதென்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு எ.ம.சா.ஆ. 1 குறியீடு செய்யப்படுகிறது.) எனக்கு smule செயலி மற்றும் டிக்டாக் செயலி மூலம் வருமானம் வருகிறதென்றால், சரியல்ல. எனக்கு வருமானம் வருகிறதென்றும் அதை எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல, வருமானம் வராது. எனது கணவருடன் நான் 2017 பிப்ரவரி மாதம் கத்தார் நாட்டிற்கு

சென்றேன் என்றால் 2016 டிசம்பர் மாதத்திலேயே சென்றேன். தோராயமாக இரண்டு மாதங்கள் அங்கு இருந்தோம். அங்கு எனது கணவருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டதென்றால், சண்டை வந்தது. அந்த சண்டையில் நான் எனது கணவரை கத்தியால் குத்த சென்றேன் என்றும், அது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நானா என்றால் நான் தான். அந்த புகைப்படம் மதுரையில உள்ள பலாமி அப்பார்ட்மெண்டில் எடுக்கப்பட்டதாகும். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ மறுத்து அவரை கத்தியால் குத்த சென்றபோது எடுத்த படம் தான் மேற்படி புகைப்படம் என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில்எனக்கு பின்னால்உள்ள கதவு மூடப்பட்டு இருப்பதை என்னை வெளியே தள்ளி எனதுகணவர் கதவை பூட்டிக்கொண்டார், கருவை கலைக்கும்படி தொந்தரவு செய்து அவ்வாறு செய்தார். நான் வெளியே செல்ல விருப்பம் இல்லாததால் கதவை திறங்கள் இல்லாவிட்டால் நான் என்னையே கத்தியால் ஏதாவது செய்துகொள்வேன் என்று சொல்லி கதவை திறக்க சொன்னபோது எடுக்கப்பட்ட புகைப்படம் தான் மேற்படி புகைப்படம் ஆகும். மேற்படி புகைப்படம் எ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. ( மேற்படி ஆவணத்திற்கு 65 B சான்று இல்லை என்றும், எங்கு வைத்து எதன் மூலம் எடுக்கபட்டதென்றும் இல்லை என்றும் மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) கத்தாரில் வைத்து நான் எனது கணவருடன் சண்டை போட்டுவிட்டு இனிமேல் உங்களோடு வாழ முடியாதென்று சொல்லிவிட்டு நான் தான் அவரை புறக்கணித்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 2017 ல் இருந்து தற்போது வரையிலும் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் ஆமாம். எதிர் மனுதாரர் தான் எனது அப்பாவிற்கு போன் செய்து அவருக்கு தற்போது வேலை இல்லை என்றும், திரும்ப அழைத்து செல்கிறேன் என்றும் சொல்லி என்னை என் அப்பா , அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தார். என்னை எதிர் மனுதாரர் டிக்கெட் போட்டு அனுப்பி வைக்கவில்லை

என்றும், நான் தான் அவருடன் வாழ மறுத்துவிட்டு வந்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு என்ன என்ன மொழிகள் தெரியும் என்றால், ஆங்கிலம், தமிழ், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகள் தெரியும். நான் சேர்ந்துவாழ கேட்டு ஒரு மனுவும், எதிர் மனுதாரர் விவகரத்து கேட்டு ஒரு மனுவும், எதிர் மனுதாரர் குழந்தையை கேட்டு ஒரு மனுவும் ஆகமொத்தம் மூன்று மனுக்கள் மதுரையில் நிலுவையில் இருந்தென்றால் சரிதான். இந்த வழக்கும் மதுரையில் நிலுவையில் இருந்ததென்றால் சரிதான். எனது மகன் படிக்கும் பள்ளியில் எதிர் மனுதாரர் சென்று எனது மகனை பார்த்தபோது நானும், எனது அப்பாவும் சேர்ந்து எதிர் மனுதாரரை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தள்ளாகுளம் காவல் நிலையித்தில் என் மீது எதிர் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால், இல்லை. அதற்கு பிறகுதான் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனு போட்டு அந்த உத்தரவின் அடிப்படையில் அனைத்து வழக்குகளும் திருவில்லிபுத்தூருக்கு மாற்றம் செய்யப்பட்டதென்றால், இல்லை. எதிர் மனுதாரர் தான் எனது அப்பாவை அடித்தார். எதிர் மனுதாரர் எனது மகன் படிக்கும் ஜெயா பள்ளிக்கு சென்று தலைமை ஆசிரியரிடம் தந்தையாகிய எனது கையெழுத்து இல்லாமல் எப்படி எனது மகனை பள்ளியில் சேர்க்கலாம்என்று பிரச்சனை செய்துள்ளார். பள்ளியில் எனது கணவரை வெளியே போகும் படி சொல்லிவிட்டார்கள். தலைமை ஆசிரியர் எங்களுக்கு தகவல் சொன்னார். அதனால் நாங்கள் பள்ளிக்கு சென்று தலைமை ஆசிரியரிடம் சொல்லிவிட்டு எதிர்மனுதாரரிடம் எனது அப்பா எனது மகள் என்ன தப்பு செய்திருந்தாலும் மன்னித்துக்கொள்ளுங்கள் தயவு செய்து மகனின் பள்ளியில் பிரச்சனை செய்ய வேண்டாம் என்று சொல்லி எனது கணவரின் காலில் விழுந்தார். அப்போது எனது கணவர் எனது அப்பாவை மிதித்து தள்ளிவிட்டார். அதனால் அங்கிருந்த ஆட்டோகாரர்கள் டாக்டரை யாரோ அடிக்கிறார்கள் என்று சொல்லி எனது கணவரை அங்கு உட்காரவைத்துவிட்டார்கள். அங்கு உள்ள நபர்களுக்கு எனது அப்பா நன்கு தெரியும். ஆனால் என் கணவரை தெரியாது. இந்த விவரத்தை நான் எனது மனுவிலும், இதற்கு முன்பு உள்ள வழக்குகளிலும் சொல்லவில்லை

என்றால், சரிதான். ஆரம்பத்தில் இருந்தே எனது கணவரை எனது அப்பாவிற்கும், எனது அண்ணன், தம்பிக்கும் பிடிக்காதென்றால், சரியல்ல. அதனால் தான் நான் எனது கணவருடன் சேர்ந்து வாழாமல் அவரை புறக்கணித்தேன் என்றால் சரியல்ல. எனது செல்போன் நம்பர் 8220873661 என்றால், இதற்கு முன்பு இந்த எண் ஆகும், தற்போது இல்லை. தற்போது மேற்படி எண் எனது அப்பாவின் கிளினிக்கில் உள்ளது. கிளினிக் யாருடையதென்றால் கட்டிடம் எனது அம்மாவுடையது, அதில் கிளினிக் எனது அப்பா வைத்துள்ளார். பொது மருத்துவமனை மற்றும் பல் மருத்துவமனை ஆகியவை மேற்படி வளாகத்தில் உள்ளதென்றால், எனது அப்பா பொது மருத்துவம் பார்க்கிறார். பல் மருத்துவருக்கான சேர் உள்ளது. அதில் மருத்துவர் யாரும் தொழில் செய்யவில்லை. என்னால் கட்டடப்பட்டு, என்னால் பராமரிக்கப்பட்டு வரும் மேற்படி மருத்துவமனையில் நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால், சரியல்ல. எனது அப்பாவின் மருத்துவமனைதான். எனக்காகதான் செட்டப் போட்டார்கள். எனக்கு ஹெல்த் பிரச்சனை இருப்பதால் அங்கு வேலை செய்ய முடியவில்லை. எவ்வளவு நாளாக மேற்படி மருத்துவமனையில் நான் வேலை பார்க்கவில்லை என்றால், என்னுடைய விருப்பம் இல்லாமல் போட்டதால் நான் அங்கு போகிறது இல்லை. இன்றையதினம் வரையிலும் நான் அங்கு போகவில்லையா என்றால் துடைத்து வைக்கப்போவேன். அந்த டென்டல் மருத்துவமனைக்கு பெயர் சாய்கிளினிக் என்றால், ஸ்ரீசாய் ஆகும். நான் எனது மனுவில் கூறியிருக்கும் முகவரியில் ்தான் தற்போது வரை குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி முகவரியில் தான் எனதுஅப்பாவின் மருத்துவமனை, ஸ்ரீசாய் டென்டல் மருத்துவமனை உள்ளதென்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நான் எனது மருத்துவமனையில் கொடுத்த மருத்துவச்சீட்டு என்றால், அது என்னுடையது அல்ல. என்னுடைய பதிவெண் என்ன என்றால், நான் அதிக நாள் பயன்படுத்தவில்லை என்பதால், முழுமையாக தெரியாது. என்னுடைய பதிவெண் என்னிடம் காட்டப்படும் மருத்துவச்சீட்டில் உள்ள 20693 என்றால்

எனது சான்றிதழை பரிசோதித்துதான் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் மருத்துவச்சீட்டில் உள்ள எழுத்து மற்றும் கையொப்பம் என்னுடையதுதான் என்றும், நான் வழக்கிற்காக என்னுடையது இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மருத்துவ சீட்டில் உள்ளவாறுதான் எனது பெயரை நான் குறிப்பிடுவேனா என்றால் இல்லை, அப்படி இருக்காது. மேற்படி மருத்துவசீட்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது எனது அப்பாவின் முகவரிதான். என்னுடைய பதிவெண் கொண்ட சான்று என்னிடம் தான் உள்ளதென்றால், சரிதான். அதை தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால், சரியல்ல அதை எதற்கு காட்டவேண்டும். என்னிடம் காட்டப்பட்ட மருத்துவசீட்டில் உள்ள எண்ணும், என்னுடைய மருத்துவ சான்றிழ் உள்ள பதிவெண்ணும் ஒன்றாக உள்ளதா என்பதை பார்ப்பதற்கு எனது மருத்துவ சான்றை தாக்கல் செய்ய முடியுமா என்றால், நானே பார்த்து சொல்கிறேன். மருத்துவசீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் வேறு மருத்துவமனை இருக்க வாய்ப்பில்லை என்றால், என்னிடம் காட்டப்படும் மேற்படி சீட்டில் மருத்துவர் முத்திரையே இல்லை. அவ்வாறு கொடுப்பது வழக்கம் இல்லை. என்னிடம் காட்டப்படும் மேற்படி சீட்டு நான் அடித்ததா என்றால் இல்லை. மேற்படி சீட்டை நான் சுகந்தி என்ற வாடிக்கையாளருக்கு 18.12.2023 அன்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஸ்ரீசாய் கிளினிக்கில் நாளது தேதி வரையிலும் ம ருத்துவம் பார்த்து வருகிறேன் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னை பராமரித்துக்கொள்வதற்கும், எனக்கு போதிய வசதி வாய்ப்பு உள்ளதென்றும் நான் நல்ல ஆரோக்கியத்தில் இருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு மருத்துவ பிரச்சனைகள் இருப்பது குறித்து ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், என்னுடைய சீனியர் தினேஷ் என்பவரும் நெருங்கி பழகி வருகிறோம் என்றால், அவர் எனக்கு ஜூனியர் ஆவார். அவர் எனக்கு நல்ல நண்பர் ஆவார். நான் அவரிடம் ஒரு நாளைக்கு பலமணிநேரம் போன் பேசி வருகிறேன் என்றால்,

சரியல்ல. பலமணிநேரம் பேசுவது கிடையாது. டிக்டாக், smule போன்ற செயலிகள் மூலம் பல நபர்களுடன் தொடர்பில் இருப்பதாக சொன்னால் சரியல்ல. எனது கணவர் வேலை செய்து ரூ. 5,00,000/– சம்பாதித்தார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர் மனுதாரர் சொன்னதை வைத்து தான்சொல்கிறேன். என் கணவர் எனது குழந்தையை மாதத்திற்கு ஒருமுறை கடைசி ஞாயிற்று கிழமை அன்று பார்த்துக்கொள்வதற்கு உத்தரவு உள்ளதென்றால் சரிதான். அதை நான் கடைபிடிக்காததால் ஒவ்வொரு மாதமும் எனக்கு பதிவு தபால் அனுப்பிதான் எதிர் மனுதார் குழந்தையை பார்க்க வருகிறார் என்றால், இதற்கு தான் தபால் வருகிறது என்று எனக்கு தெரியாது. நான் எப்போதும் எனது மகனை கூட்டிக்கொண்டுதான் போவேன். ஆனால் எதிர் மனுதாரரின் அப்பா மட்டும் வந்தால் நான் அனுப்ப மாட்டேன். எதிர் மனுதாரரும் வந்தால் அனுப்புவேன். டிசம்பர் 2023 மாதத்தில் எதிர் மனுதாரர் எனது மகனை அழைத்து செல்ல வரவில்லை, அதனால் நான் உறவினர் மூலம் தகவல் சொல்லி எனது மகனை விடுமுறை நாள் முழுவதும் இருந்துவிட்டு வா என்று அனுப்பி வைத்தேன். ஆனால் ஒரே நாளிலேயே எனது மகனை திருப்பி அனுப்பி வைத்துவிட்டார். உத்தரவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கிழக்கு வாசலில் வைத்து பார்க்க வேண்டும் என்று உத்தரவென்றால் சரிதான். அதனால் நான் சொல்லவது போல் குழந்தையை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தபாலில் தேதியை குறிப்பிட்டு பார்க்க வருவதாக சொல்லி இருக்கும் என்றால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் குழந்தையை பார்க்கவிடாமல் தடுப்பதால் தான் ஒவ்வொரு மாதமும் எதிர் மனுதாரர் எனக்கு பதிவு தபால் அனுப்பிதான் குழந்தையை பார்க்கிறார் என்றால், சரியல்ல. நானும் வேலை செய்துவருவதால் நானும் இரண்டாம் மனுதாரருக்கு ஜுவனாம்சம் கொடுக்க கடமைபட்டுள்ளேன் என்றால், நான் வேலைக்கு போகவில்லை எனது அப்பா என் மகனை நன்றாக பார்த்து வருகிறார். எதிர் மனுதாரர் தற்போது எந்த வேலையும் இல்லாமல் வீட்டில் சும்மா இருந்து வருகிறார் என்றால், தெரியாது. நீதிமன்ற வழக்கு, காவல் நிலைய வழக்கு ஆகியவற்றால் வேலைக்கு செல்ல

முடிமயாமல் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால், தெரியாது. நான் வேலை செய்துவருவதால் எனக்கு எதிர் மனுதாரர் எந்த வித ஜுவனாம்சமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால் என்னை பொறுத்து மனு தள்ளுபடிசெய்யப்பட வேண்டியதென்றால் சரியல்ல.